# DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திங்கள்கிழமை 06ம் நாள் சாட்சியாகிய சதிஷ் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr-III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதிஷ் | வயது | 33 |
| த/பெ. | மணி | இனம் | ஆண் |
| கிராமம் | வடமாம்பாக்கம் | தொழில் | மெக்கானிக் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.51/2024**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை .)

**<u>முதல் விசாரணை 06.01.2025 அ.சா.1</u>**

1. நான் வடமாம்பாக்கத்தில் வசித்து வருகிறேன்.24.07.2024ம் தேதி இரவு 09.10 மணிக்கு பாங்காரு அம்மா கண்டிகையில் உள்ள எனது மாமா லட்சுமணன் வீட்டு அருகே பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி, ங்கோத்த என்று என்னை தகாத வார்த்தைகளால் என்னை பேசினார். நான் என்னவென்று கேட்டபோது கீழே கிடந்த கட்டையை எடுத்து எனது தலையின் பின்பக்கம் எதிரி அடித்தார்.

2. நான் கீழே விழுந்து விட்டேன். என்னை, எனது மாமா லட்சுமணன் அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். மருத்துவமனையில் அரக்கோணம் நகர போலீசார் வந்து விசாரணை செய்து புகார் எழுதினார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது நான் கொடுத்த புகார் வாக்குமூலம். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

3. என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கட்டையால் தான் ஆஜர் எதிரி என்னை சம்பவத்தின் போது தாக்கினார். **(சிபி.100/2024ல் கண்ட கட்டை சான்று பொருள்-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. எதிரி ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.